செ.வெ.எண் : 35/ ஜூன் நாள் : 25.06.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 25% இட ஒதுக்கீட்டின் கீழ் பயன் பெற தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

### மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

பள்ளிக் கல்வித் துறை இராமநாதபுரம் மாவட்டம், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 ன்படி 2021 —— 2022 ஆம் கல்வியாண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவு நிலை வகுப்பின் (LKG மற்றும் 1St Standard) குறைந்தபட்சம் 25% இட ஒதுக்கீடு அடிப்படையில் சேர்க்கை கோருவோர் 05.07.2021 முதல் 03.08.2021 வரை இணைய வாயிலாக மாணவர்கள் சேர்க்கை தொடங்கப்பட உள்ளது.

பள்ளிக் கல்வித்துறை இராமநாதபுரம் மாவட்டம் சார்பாக குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 பிரிவு 12(1)(C) ன்படி மாவட்டத்திலுள்ள அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவு நிலை வகுப்பில் (LKG மற்றும் 1St Standard) குறைந்தபட்ச 25% இட ஒதுக்கீட்டிற்கான மாணவர் சேர்க்கை நடப்பு 2021 - 2022 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட உள்ளது.

RTE மாணவர் சேர்க்கை நிகழ்வுகள்: நாள்

1. 03.07.2021 அன்று பள்ளிக் கல்வித் துறையால் RTE 25% இட ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்ட இடங்கள் பள்ளிக் கல்வி தள இணையதளத்தில் பள்ளி வாரியாக வெளியிடப்படுதல்.
2. 05.07.2021 முதல் 03.08.2021 வரை rte.tnschools.gov.in என்ற பள்ளிக் கல்வித்துறை இணைய தளத்தில் இணைய வாயிலான மாணவர் சேர்க்கை விண்ணப்பித்தல்.
3. 09.08.2021 மாலை 05.00 மணிக்குள் இணைய வாயிலாக விண்ணப்பித்துள்ள மாணவர்களில் RTE 25% இட ஒதுக்கீட்டிற்கு தகுதி வாய்ந்த மாணவர்களின் பட்டியல் வெளியிடுதல்.
4. 10.08.2021 அன்று இட ஒதுக்கீட்டிற்கு தகுதி வாய்ந்த மாணவர்களில் கூடுதலாக விண்ணப்பம் பெறப்பட்டிருப்பின் பள்ளி அளவில் குலுக்கள் நடைபெறுதல் மற்றும் RTE 25% இட ஒதுக்கீடு அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கை இறுதி செய்தல்.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 62 மெட்ரிக் பள்ளிகளில் 1043 இடங்கள், 90 நர்சரி தொடக்க பள்ளிகளில் 841 இடங்கள் மற்றும் 2 சுயநிதிப் பள்ளிகளில் 16 இடங்கள் என மொத்தம் 154 சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் RTE 25% இட ஒதுக்கீடு வாயிலாக 1900 இடங்களுக்கான மாணவர் சேர்க்கைப் பணிகள் நடப்பு 2021 - 2022 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட உள்ளன.

மாணவர் சேர்க்கை கோரும் குழந்தைகளின் பெற்றோர்கள் பள்ளிக் கல்வித் துறையின் rte.tnschools.gov.in என்ற இணையதளத்தில் 05.07.2021 முதல் 03.08.2021 வரை மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை உரிய சான்றுகளுடன் பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்கலாம். மேலும், பெற்றோர்கள் இணைய வழியில் விண்ணப்பிக்க வசதியாக முதன்மைக் கல்வி அலுவலகம், மாவட்ட கல்வி அலுவலகம், வட்டார கல்வி அலுவலகம் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வட்டார வள மைய அலுவலகங்களில் இணைய வழி விண்ணப்பத்தினை பதிவேற்றம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனவும் அரசின் கொரோனா பரவல் தடுப்பு நிலையான செயல்பாட்டு வழிமுறைகளை கட்டாயம் பின்பற்றி நடப்பு 2021-2022 ஆம் கல்வியாண்டிற்கான 25% இட ஒதுக்கீட்டின் கீழ் மாணவர் சேர்க்கை பணிகள் தொடங்கப்பட உள்ளது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**